1992 மார்ச் 20]

பிரச்சினைகளையெல்லாம் ஒன்றாகச் சிந்தித்து, அதற்கேற்ப தகுந்த நேரத்திலே முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 290, திருமதி கற்பகம் இளங்கோ. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

290—

பாலம் கட்டுதல்.

*4661 திருமதி கற்பகம் இளங்கோ:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காரைக்குடி தொகுதி பணங்குடி— விருசுழி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று கூறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். இங்கே குறிப்பிட்டுள்ள பணங்குடி விருசுழி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பாலம், அந்தத் திட்டம் நிறைவேறுவதன் மூலம் பயன்பெறுவோர் சுமார் 15 கிராமங்களில் வசிக்கும் 50 ஆயிரம் பேர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இந்த ஆற்றில் தண்ணீர் வரும் காலகட்டங்களில் அருகிலுள்ள கள்ளல் என்ற ஊருக்குச் சென்று, மருத்துவமனைக்கும், யூனியன் அலுவலகத்துக்கும் சென்று வர இயலாமல் மக்கள் மிகவும் அல்லலுறுகிறார்கள். எனவே, தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் நமது புரட்சித் தலைவியின் பொன்னான

ஆட்சியில், அவர்கள் இடும் கட்டளையை மின்னல் வேகத்தில் துரிதத்துடன் செயல்படுத்தும் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரும் நிதி ஆண்டிலாவது, எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு அவர்களது குறையைக் களைய ஆவன செய்வார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிலே குறிப்பிடப்பட்டிருக்கிற பாலமானது விருசுழி ஆற்றின் குறுக்கே கட்டப்படவேண்டுமென்பது உண்மை. இது ஒரு ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலையாகும். நான் ஏற்கனவே அந்தப் பகுதிக்குப் போய் இருக்கிறேன். முக்கியமான ஒரு பகுதி. இரண்டு கிராமங்களை இணைக்கக்கூடிய சாலைதான். இருந்தாலும் இது ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலையாக இருக்கிற காரணத் தாலே பகுதி-2 திட்டத்தின் கீழே எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இந்தச் சாலையை சீர்செய்வதற்கும் தாம்போகி கட்டுவதற்கும் ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தான் இந்த ஆண்டுத் திட்டத்திலே எடுத்துச் செய்வதற்கான வழிவகை இல்லை என்று சொன்னேன். வரும் ஆண்டுகளிலே இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து, அந்தப் பகுதி மக்களுடைய நன்மை கருதி, இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 291. திரு. சோ. இராசாராமன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

291—

## கூட்டுறவுத் துறை மூலம் உரத் தொழிற்சாலை

*2616 திரு. சோ. இராசாராமன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் ஓர் உரத்தொழிற்சாலை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எங்கு அமைக்கப்படும்?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS